# திராவிட மாடல் அரசு

109

ர.பிரகாசு

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**




# உங்களைத் தேடி...உங்கள் ஊரில்!

**மக்களைத் தேடிச்செல்லும் அரசு!**





அரசின் திட்டங்களைப் பெற, பலன்களைப் பெற நிர்வாகத்தையும், அதிகாரத்தில் இருப்போரையும் நோக்கி மக்கள் அலைந்த காலம் மாறி, இப்போது மக்களின் இருப்பிடத்தைத் தேடி, அரசாங்கம் செல்லும் காலம் உருவாகியிருக்கிறது. முதலில் ‘இல்லம் தேடி கல்வி’ சென்றது, பின்னர், ‘மக்களைத் தேடி மருத்துவம்’ சென்றது. இவற்றுக்கெல்லாம் மேலாக ‘களத்தில் முதல்வர்’ என மக்களைத் தேடிச் சென்றார் முதலமைச்சர். அந்த வரிசையில் மக்கள் குறைகளைக் களைய, மக்களைத் தேடிச் செல்வதற்காக, ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கிய உன்னதத் திட்டமே ‘உங்களைத் தேடி... உங்கள் ஊரில்’.

## கழகமும் களப்பணியும்!

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பொருளாதார ஆலோசகராக இருந்த ‘திரவிடியன் இயர்ஸ்’ என்ற நூலை எழுதிய, எஸ்.நாராயண், “தி.மு.கழகம் உருவான போது மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான பாலமாக தி.மு.க.-வினர் உருவெடுத்தனர். தி.மு.க. வருகைக்குப் பின்னரே மக்கள் குறைகளை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் எடுத்து வரும் பழக்கம் உருவானது’’ என்று அந்நூலில் பதிவு செய்திருப்பார். அப்படி தொடக்க காலம் தொட்டே மக்கள் பிரச்சினைகளை முன்னெடுத்து வந்த கழகம் என்பதால், எந்தத் திட்டத்தை அரசு தீட்டினாலும், கடைநிலை வரை அதே வீரியத்தோடு, நோக்கத்தோடு போய்ச்சேருமா என்பதை மற்றெந்த கட்சிகளையும் விட நன்கறிந்த இயக்கம் தி.மு.கழகம்.

எட்டாம் வகுப்புவரை படித்தால், பெண் குழந்தைகளுக்குத் திருமண உதவித்தொகையாக ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று ‘மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தை’ முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கியபோது, பத்தாம் வகுப்புவரை படித்த ஒரு மாணவிக்குத் திருமண நிதி உதவியைத் தர முடியாது என மறுத்திருக்கிறார் ஓர் அதிகாரி. எட்டாம் வகுப்பு வரையாவது பெண்கள் படிக்க வேண்டுமே என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டத்தின் நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்ட அதிகாரியின் செயலை மேற்கோள்காட்டிய கலைஞர், ‘இப்படிப்பட்ட அதிகாரிகளையும் கொண்டுதான் அரசை நடத்துகிறேன்’ என்றார்.

எதிர்க்கட்சியாகவும், ஆளுங்கட்சியாகவும் இருந்த கழகத்தின் இத்தகைய கடந்தகால அனுபவங்களில் இருந்து, அரசு உருவாக்கும் திட்டங்கள் மக்களை முழுமையாகச் சென்றடைவதை முறைப்படுத்துவதற்கான முன்னெடுப்பாக தற்போதைய ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கிய திட்டமே ‘உங்களைத் தேடி... உங்கள் ஊரில்’.

## உங்களைத் தேடி... உங்கள் ஊரில்

அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், ‘உங்களைத் தேடி... உங்கள் ஊரில்’ என்ற புதிய திட்டத்தை 23-11-2023 அன்று முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார். 31.01.2024 அன்று இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ திட்ட முகாம், சென்னை மாவட்டம் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும், குறிப்பிட்ட வட்டத்தில், ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும். முகாம் நடைபெறும் வட்டம் குறித்த தகவல், மாவட்ட ஆட்சித் தலைவரால் முன்கூட்டியே பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அளவிலான மற்ற உயர் அலுவலர்கள், காலை 9 மணி முதல் மறுநாள் காலை 9 மணி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி, பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து, கள ஆய்வு மேற்கொள்வர். கள ஆய்வின் போது பெறப்படும் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள், மேம்பட்ட சேவைகள் வழங்குதல், திட்டங்களை விரைவுபடுத்துதல் தொடர்பாக உரிய தீர்வு காண வேண்டும். மேலும் அன்றைய தினமே, ஆட்சியர்கள் மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.



## களத்திலேயே தீர்வு!

ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்ட முகாம் நடைபெறும் வட்டம் குறித்து, முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, நடைபெற்ற பின்பு கள ஆய்வில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான தகவல்கள் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன. உதாரணமாக, கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் உள்ள 25 வருவாய் கிராமங்களிலும் 24.10.2024 அன்று ஆட்சியர் தங்கவேல் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் சிவகாமசுந்தரி முன்னிலையில் கள ஆய்வு நடைபெற்றது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், நியாய விலைக்கடைகள், கிராம நிர்வாக அலுவலகம், வட்டார பொது சுகாதார மைய கட்டடம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சத்துணவுக் கூடங்கள், பள்ளிகள், வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு நடத்தப்பட்டு, பிற்பகலில் அரசு அதிகாரிகளிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

மாலையில் கிருஷ்ணராயபுரம் வட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தெருவிளக்கு வசதிகள், பூங்காக்கள், நூலகங்கள், பேருந்து நிலையங்கள், அரசு விடுதிகள், பொதுக்கழிவறை ஆகியவற்றை ஆய்வுசெய்து நிறை-குறைகளைக் கேட்டறிந்தனர். மேலும், கள ஆய்விற்குச் சென்ற அலுவலர்கள் அங்கேயே தங்கி, மறுநாள் காலையில் தூய்மைப்பணிகள், காலை உணவுத் திட்டம், பால் விநியோகம், குடிநீர் வசதிகள், பொதுப்போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டவற்றையும் பார்வையிட்டனர். இறுதியாக, நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பாக 47 பயனாளிகளுக்கு ரூ.98.39 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதுபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டம் தேர்வு செய்யப்பட்டு, அரசின் திட்டங்கள் அங்கு செயல்படுத்தப்படும் விதம், அடிப்படை வசதிகளின் நிலை ஆய்வு செய்யப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட அரசு இணையதளப் பக்கத்திலும் இதுகுறித்த விவரங்கள் புகைப்படங்களுடன் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. தங்கு தடையின்றி அரசு நிர்வாகம் கடைக்கோடி வரை வெளிப்படைத்தன்மையுடன் செயல் படுத்தப்படுவது, இத்திட்டத்தால் உறுதி செய்யப்படுகிறது. அரசு இயந்திரத்தை அணுகுவதில், சாமானியர்களுக்கு இருக்கும் தடைகளைத் தகர்த்து, அரசு இயந்திரமே அவர்களை அணுகும் இம்முத்தான முன்னெடுப்பு திராவிட மாடலின் மற்றுமோர் மகுடம்!

**தங்கு தடையின்றி அரசு நிர்வாகம் கடைக்கோடி வரை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்தப்படுவது, இத்திட்டத்தால் உறுதி செய்யப்படுகிறது.**

**...சாதனை தொடரும்**

## ‘திராவிட இந்தியா’



1924-ஆம் ஆண்டு ஜான் மார்ஷல் ‘சிந்துவெளி நாகரிகம்’ பற்றிய தனது கண்டுபிடிப்புகளையும், கருதுகோள்களையும் உலகுக்கு அறிவித்தார். அதன் நூற்றாண்டை தமிழ்நாடு அரசு இப்போது கொண்டாடி வருகிறது. ‘திராவிட மொழிக் குடும்பம்’ பற்றிய ஜான் மார்ஷல், கால்டுவெல்லின் கருத்துக்களை ஆரியக் கூட்டமும் ஏற்பதில்லை, தமிழ்த்தேசியத்தின் பெயரால் ஆரியத்தைப் பின்பற்றுவோரும் ஏற்பதில்லை. இவர்கள் மிஷனரிகள், வெளிநாட்டினர் என்பதுதான், இருதரப்பும் வைக்கும் முதன்மை வாதம்.

பச்சையப்பா கல்லூரியில் பேராசிரியராக இருந்த டி.ஆர்.சேஷ ஐயங்கார் எழுதிய ‘திராவிட இந்தியா’ ஆய்வு நூல் திராவிட நாகரிகம் குறித்த ஜான் மார்ஷலின் கருத்துக்கு வலுசேர்ப்பதாக அமைந்திருக்கிறது. இந்நூலின் முதற்பதிப்பு 1925-ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் வெளியானது. ‘திராவிட மொழிக் குடும்பம்’ என்பதும், திராவிடர் ஒருகாலத்தில் இந்தியா முழுவதும் நிரம்பி இருந்தார்கள் என்பதும் அடிப்படை உண்மை என்று இந்நூலில் டி.ஆர்.சேஷ ஐயங்கார் நிறுவுகிறார். நூலின் பல இடங்களில் ‘திருக்குறள்’, ‘புறநானூறு’, ‘மணிமேகலை’ போன்ற இலக்கியங்களில் இருந்து நூலாசிரியர் மேற்கோள்கள் காட்டியிருக்கிறார்.

இந்தியாவின் பண்பாடு, கலாச்சாரம் என்பது ஆரியப் பண்பாடு, கலாச்சாரம் என்பதாக மட்டுமே முன்வைக்கப்படும் நிலையில், திராவிடக் கலாச்சாரம் பற்றியும், அதன் இனப் பங்களிப்பு என்ன என்பதையும் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகிறார் நூலாசிரியர். ஆரியத்திற்கு எதிரான பண்பாட்டு யுத்தத்தை திராவிடம் கூர்மைப்படுத்தி வரும் வேளையில், தமிழ்த்தேசியத்தின் பெயரால் குறுக்குசால் ஓட்டும் கூட்டத்திற்கும் சேர்த்து உண்மைகளை உணர்த்த, இன்றும் அவசியமாக இருக்கிறது இந்நூல். அந்த வகையில் ‘திராவிட இந்தியா’ நூலை மொழிபெயர்த்து, தமிழில் தற்போது வெளியிட்டிருக்கிறது ‘திரவிடியன் ஸ்டாக்’ பதிப்பகம். வாங்கிப் படியுங்கள், பயன்பெறுங்கள்.

நூலை வாங்க: 90927-87854. விலை: ரூ.250

## :ப்ளாஷ்பேக்



சாயல்குடி பி.இ.இராமர்



### நீங்காத நினைவுகள்!

1994-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது, அன்றைய தி.மு.க. மாநில இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இளைஞர் அணி பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தேன். உடன் அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்கள், பொதுக் கூட்டத்தைப் பற்றி கழகத் தலைவரிடம் விளக்கிய போது எடுத்த புகைப்படம் இது. மனதை விட்டு நீங்காத நினைவுகளை உள்ளடக்கிய புகைப்படம்.

**- சாயல்குடி பி.இ.இராமர்,**
**தி.மு.க. மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### மக்கள் தீர்ப்பு!

1972-இல் சென்னை சிம்சன் கம்பெனியின் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்த கழகத்தின் காட்டூர் கோபாலை நீக்க, ஒரு கோஷ்டி வலியுறுத்தியது. இதன் பின்னணியில் அன்றைய ஒன்றிய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் இருந்தார். ‘இது மாநில விஷயம், ஒன்றிய அரசு தலையிடக்கூடாது’ என்று எச்சரித்தார் கலைஞர். தமிழ்நாட்டின் தொழிலாளர் நலத்துறை அமைச்சரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது ஒன்றிய அரசு. ஆயிரம்விளக்குப் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்களிடம் இதைக் கேட்டார் கலைஞர். போக வேண்டாம் என மக்கள் சொல்லவே, அமைச்சரை அனுப்ப மறுத்தார் கலைஞர்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

759

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131